***DEPOSITION OF WITNESS***
***(Chapter XXV BNSS)***

***IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I COURT***
***Mannargudi***
***CC.No.210/2022 – P.W. 7 (LW3)***

| | |
|---|---|
| *Name* | மாரிமுத்து |
| *Father/Husband's Name* | வைத்தியலிங்கம் |
| *Village* | பருத்திக்கோட்டை |
| *Taluk* | |
| *Religion* | |
| *Age* | *47* |

*1 முதல் 4 வரையான* **எதிரிகள் ஆஜர்.**

*Solemnly affirmed in accordance with the provisions of sec 4 of OATH Act 1969 of on the day 22.06.2026.*

***அரசு தரப்பில் முதல் விசாரணை***

1. நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். விவசாய வேலை செய்து வருகிறேன். அசா.1 மற்றும் ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும்.

அசா.1 க்கும், ஆஜர் எதிரிகளுக்கும் இடையே என்ன பிரச்சனை என்று எனக்கு தெரியாது. வழக்கு விபரம் எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**(அரசுத்தரப்பில் தன்னுடைய சாட்சி முந்தைய வாக்குமூலத்திற்கு முரணாக சாட்சியம் அளிப்பதால் அவரை, BSA பிரிவு 157 ன் கீழ் விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டது. பரிசீலனைக்கு பின் விசாரணைக்கு அனுமதி வழங்கப்பட்டது).**

**அரசுத்தரப்பில் குறுக்கு விசாரணை**

போலிசார் விசாரணையிலும் வாக்குமூலத்திலும் கடந்த 17.01.2019 ம் தேதியன்று மாலை 06.00 மணியளவில் அசா.1 ராஜாளிகுடிக்காட்டில் இருந்து சைக்கிளில் வந்து கொண்டிருந்தபோது அவருடைய தெருவை சேர்ந்த ஆஜர் எதிரிகள் அசா.1 ஐ தகாத வார்த்தைகளால் திட்டி, கையில் மறைத்து வைத்திருந்த கம்பியால் தலையிலும், கையிலும் தாக்கி, கொலை மிரட்டல் விடுத்தார்கள் என்றும், சம்பவத்தை நான் நேரில் பார்த்தேன் என்றும் கூறிவிட்டு தற்போது எனக்கே தெரிந்த காரணத்திற்காக அரசுத்தரப்பிற்கு எதிராகவும், எதிரிகளுக்கு சாதகமாகவும் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் - சரியல்ல.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

இல்லை.

Sd/--J. Tamizhmurugan,
Judicial Magistrate No.I,
Mannargudi.